பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

30 09 2025 TUESDAY 7.15 PM

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. காஸாவில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்க அதிபர் அறிவித்த திட்டத்தை வரவேற்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டின் மருந்து ஏற்றுமதி 30 பில்லியன் டாலராக உயரும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இறுதி வாக்காளர் பட்டியலில் 7 கோடியே 42 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

4. பாகிஸ்தானின் Quetta-வில் துணை ராணுவப்படை தலைமையகம் அருகே சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 10 பேர் உயிரிழந்தனர்.

5. உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கு எதிராக இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

<<<<<<<>>>>>>

காஸாவில் நடைபெறும் சண்டையை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள அமைதி திட்டத்தை இந்தியா வரவேற்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காஸா பிரச்சினைக்கு நீண்டகால மற்றும் நிலையான அமைதிக்கு அதிபர் ட்ரம்பின் முயற்சி வழிவகுக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் மக்களின் முன்னேற்றதிற்கு இது உதவிகரமாக அமைவதோடு, மேற்காசியாவின் நலனுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, காஸாவில் போர் நிறுத்தத்திற்கு அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்பின் முயற்சிகளுக்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.

பெய்ஜிங்கில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த சீனா வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் Guo Jiakun, இஸ்ரேல் – பாலஸ்தீனம் இடையே அமைதியை மேற்கொள்ள சீனா அனைத்து ஆதரவையும் அளிக்கும் என்று கூறினார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி அண்மையில் தொங்கிவைத்த ஆரோக்கியமான பெண் – வலிமையான குடும்பம் திட்டத்தின்கீழ், 12 லட்சத்து 31 ஆயிரம் சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய சுகாதார குடும்பநல அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த முகாம்கள் மூலம் ஆறு கோடியே 51 லட்சம் பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதார சேவைகளை அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 17-ஆம்தேதி தொடங்கிய இந்த திட்டம், நாளை மறுநாள் வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டின் மருந்து ஏற்றுமதி 30 பில்லியன் டாலராக உயரும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத்துறை - உத்தரப்பிரதேச அரசு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதன்மூலம் மக்களுக்கு தரமான சுகாதார வசதிகள் அளிப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்றார்.

உலக மருந்தகம் என்று போற்றப்படும் இந்தியா, 200-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நோய் தடுப்பு மருந்துகளை வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் உள்நாட்டு மருந்து வணிகம் இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் 130 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கக்கூடும் என்று அவர் குறிப்பிட்டார்.

உலகிலேயே முதல் உயிரி தொழில்நுட்ப கொள்கையின் மூலம், நாட்டின் பொருளாதாரமும் மேம்படும் என்று திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

கலாச்சார உரிமைகளுக்கும், சமமான வளர்ச்சிக்கும் இந்தியா உறுதிபூண்டிருப்பதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டில் கலாச்சார கொள்கை மற்றும் நிலையான வளர்ச்சி தொடர்பான உலக மாநாட்டிற்கு தலைமை தாங்கி அவர் உரையாற்றினார்.

இம்மாநாட்டின்போது, ஸ்பெயின், ஈரான், நார்வே, கொலம்பியா உள்ளிட்ட நாடுகளின் கலாச்சாரத்துறை அமைச்சர்களிடம் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் ஆசோசனை மேற்கொண்டார்.

<<<<<<<>>>>>>

டிஜிட்டல் முறையை பயன்படுத்தி நாட்டில் தொலைந்துபோன ஆறு லட்சம் மொபைல் போன்கள் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் சன்சார் சாத்தி திட்டம் மூலம், தொலைந்த மொபைல் போன்களை எளிதாக திரும்பப்பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மொபைல் போன்கள் திருட்டுப்போவதை தடுக்க சன்சார் சாத்தி திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அரசு தெரிவித்துள்ளது.

மொபைல் போன் திருட்டு போனால் உடனடியாக சன்சாத் சாத்தி இணையதளத்தில் பதிவு செய்து, அதனை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

போர்களில் வெற்றிபெற ராணுவ தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வது மிக முக்கியமானது என்று விமானப்படை துணை தலைமை தளபதி ஏர் மார்ஷல் Awadhesh Kumar Bharti தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஏரோ டெக் இந்தியா நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், 100 சதவீத உள்நாட்டு உற்பத்தியை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்புத்துறையில் ஆராய்ச்சி மற்றும் கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டுவருவதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் இதுதொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பு கவுன்சில் உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2022-ஆம் ஆண்டைவிட இந்தியா கூடுதல் வாக்குகள் பெற்று உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் சிவில் விமான போக்குவரத்துத்துறையில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதன் அடையாளமாக உறுப்பு நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு அளித்துள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இறுதி வாக்காளர் பட்டியலில் 7 கோடியே 42 லட்சம் வாக்காளர்கள் இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பீகார் தலைமை தேர்தல் அதிகாரி சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக வெளியிட்ட பதிவில், வாக்காளர்கள் தங்களது பெயரை voters.eci.gov.in என்ற இணையதளத்தில் சரிபார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

சிறப்பு திருத்தத்தின் அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் இருந்து 3 லட்சத்து 66 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதாகவும், 21 லட்சத்து 53 ஆயிரம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்களின் பங்களிப்பில் உள்ள வித்தியாசம் கவலை அளிப்பதாக நித்தி ஆயோக் துணைத்தலைவர் Suman Bery தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் பல்கலைக்கழக பொருளாதார கல்வி நிறுவன நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், 26 சதவீதம் மட்டுமே மக்கள் தொகை உள்ள அதிக வருமானம் பெறும் மாநிலங்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 44 சதவீத பங்களிப்பை வழங்குவதாக கூறியுள்ளார்.

தமிழகம் போன்ற மாநிலத்துக்கும், பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கும் தனித்தனியான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாட்டில் உள்ள 54 தனியார் பல்கலைக்கழகங்கள் தகவல்கள் வெளியிடுவது தொடர்பான நெறிமுறைகளை மீறியிருப்பதாக பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மானியக்குழு செயலர் திரு மனீஷ் ஜோஷி கூறுகையில், பல்கலைக்கழகங்கள் குறித்த அனைத்து தகவல்களும் பொதுமக்களுக்காகவும், மாணவர்களின் வசதிக்காகவும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருந்ததை எடுத்துரைத்தார்.

இந்த பல்கலைக்கழகங்களுக்கு மின்னஞ்சல் மூலம் இதுதொடர்பான தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் உள்ள மாதா வைஷ்ணோ தேவி கோவிலில் நவராத்திரியை முன்னிட்டு கடந்த ஒரு வாரத்தில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வழிபாடு செய்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாதா வைஷ்ணோ தேவி கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பக்தர்களின் வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நான்கு புதிய விசா நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு சிறப்பு விசா மூலம் தொழில்நுட்பத்துறை நிபுணர்கள் அந்நாட்டுக்கு எளிதாக வருவதற்கு வழிவகை செய்துள்ளது.

பொழுதுபோக்கு விசா மூலம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளுக்கு செல்வதற்கும், மாநாடு, கண்காட்சி, பொருளாதார கலாச்சார விளையாட்டு போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான விசாவும் அறிமுகப்படுத்தியுள்ளன.

சுற்றுலா பயணிகள் பல்வேறு சுற்றுலா தலங்களுக்கு செல்வதற்காகவே சிறப்பு சுற்றுலா விசாவையும் அந்நாட்டு அரசு கொண்டுவந்துள்ளது.

<<<<<<<>>>>>>

பாகிஸ்தானின் Quetta-வில் துணை ராணுவப்படை தலைமையகம் அருகே சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 10 பேர் உயிரிழந்தனர்.

செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த பலுஜிஸ்தான் சுகாதாரத்துறை அமைச்சர் Bakht Mohammad kakar, இந்த தாக்குதலில் 32 பேர் காயமடைந்ததாக கூறினார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கு எதிராக முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 40 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 210 ரன் எடுத்துள்ளது. தற்போது மழை காரணமாக ஆட்டம் தடைபட்டுள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இலங்கை முதலில் பந்துவீச தீர்மானித்தது.

முன்னதாக, மழை காரணமாக ஓவர் 48-ஆக குறைக்கப்பட்டது.

---------------

Brisbane-ல் நடைபெறும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியாவுக்கு எதிராக முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 243 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-------------

போர்ச்சுக்கல் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், அவர் 6-1, 6-4 என்ற செட் கணக்கில், போர்ச்சுக்கல்லின் Frederico Silva-வை வென்றார்.

-------

புதுதில்லியில் நடைபெற்றுவரும் Fenesta ஓபன் டென்னிஸ் போட்டியில், Divya Bhardwaj இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் Divya Bhardwaj – பூஷாவை 6-3, 6-4 என்ற நேர் செட்டுகளில் வென்றார்.

<<<<<<<END>>>>>>